**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண்.711/2023</u>**

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11–ம் நாள் வியாழக்கிழமை **வா.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | குப்புசாமி | தொழில் |
| த/பெ | கருப்புசாமி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனக்கு பிரதிவாதியை அறிமுகம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கடந்த ஏழு ஆண்டு காலமாக பிரதிவாதி என்ன என்ன தொழில்கள் செய்து வந்தார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல நிதி நிறுவனம் நடத்தி வந்தார். வாட்டர் பில்டர் சர்வீஸ் தொழில் செய்து வந்தார். தற்போது டிராவல்ஸ் நடத்தி வருகிறார். நான் கூறுவது போல அவர் எந்த தொழிலும் செய்யவில்லை என்றாலும் நான் தவறாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு எவ்வளவு வயது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல 40 வயது இருக்கும். பிரதிவாதிக்கு எப்போது திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல அவருக்கு திருமணம் நடக்கவில்லை. அவருக்கு முறையான திருமணம் நடக்கவில்லை. நான் கையெழுத்து செய்துள்ள கிரைய ஒப்பந்தத்தில் கையெழுத்து போடுவதற்கு கோவிந்தசாமியும் நாட்டுதுரையும் அழைத்தார்கள். நான் கிரைய ஒப்பந்தத்தில் கையெழுத்து செய்த தேதியில் வாதி அவரது அலுவலகத்தில் வேறு யாருடனாவது பணப்பரிவர்த்தனை செய்தாரா என்றால் இல்லை.

2. மேற்படி தேதியில் வாதி பிரதிவாதிக்கு எவ்வளவு தொகை ரொக்கமாக செலுத்தினார் என்றாலும் எவ்வளவு தொகையை வங்கி மூலம் செலுத்தினார் என்றாலும்தொகை தெரியும். அதனுடைய எண்ணிக்கை என்ன என்பது குறித்து

எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. 22.04.2021 ஆம் தேதி என்னை சாட்சி கையெழுத்து போடுவதற்கு அழைத்தார்கள். நான் கையெழுத்து செய்த கிரைய ஒப்பந்தத்தில் கிரைய காலமாக இரண்டு மாதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. அதை நான் படித்து பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் கிரையக்காலமாக 70 நாட்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதில் நான் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னாலும் சரியல்ல மேற்படி ஆவணத்தில் தான் கையெழுத்து செய்தேன். மேற்படி ஆவணத்தில் இரண்டு மாதங்கள் காலக்கெடுவாக விதிக்கப்படவில்லை என்று சொன்னால் 70 நாட்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் கோவிந்தசாமி, நாட்டுத்துரையின் சொத்தை கிரையம் பெறுவதாக எழுதப்பட்டிருந்தது. கோவிந்தசாமி தன்னுடைய மகளுக்காக கிரையம் பெறுவதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கோவிந்தசாமிக்காக கிரையம் பெறுவதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கோவிந்தசாமிக்காக மட்டும் கிரயம் பெறுவதாக மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் ஆமாம். ( தற்போது சாட்சி மகளுக்காக கோவிந்தசாமி கிரையம் பெறுவதாக ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என சாட்சியம் அளிக்கிறார். )

3. மேற்படி ஆவணத்தில் பத்திர எழுத்தர் காளிமுத்து அலுவலகத்தில் வைத்து நான் கையெழுத்து செய்தேன். நான் கையெழுத்து செய்த போது சுமார் 10.00 அல்லது 11.00 மணி இருக்கும். மற்ற நபர்களும் அதே 10.00 அல்லது 11.00 மணிக்குள் கையெழுத்து செய்தார்கள். மேற்படி கையெழுத்துச் செய்யும் இடத்திற்கு நாங்கள் அனைவரும் 10.00 மணிக்கு வந்தோம். மேற்படி ஒப்பந்தத்தை காளிமுத்து தயார் செய்து வைத்திருந்தார். கையெழுத்து செய்தது அன்றே ஒப்பந்தத்தை அவர் தயார் செய்திருப்பார். மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தில் கோவிந்தசாமியும் நாட்டுத்துரையும் தலா நான்கு கையெழுத்துக்கள் செய்தார்கள். நான் ஒரு கையெழுத்து போட்டேன்.

4. வாதி பிரதிவாதி மற்றும் மற்றொரு சாட்சிக்கு இடையில் ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றாலும் அதில் நான் சாட்சியாகவோ அல்லது

தரப்பினராகவோ கையெழுத்து செய்துள்ளேனா என்றால் கையெழுத்து செய்துள்ளேன். ஒரு புரோநோட்டில் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன். மேற்படி ஆவணத்தில் வாதி மற்றும் பிரதிவாதிகள் தமிழில் கையெழுத்து செய்தார்கள். சாட்சி கையெழுத்து செய்த நால்வரும் ஆங்கிலத்தில் தான் அவர்அவர்களுடைய இனிஷியலை எழுதினோம். பிரதிவாதி கிரைய ஆவணத்தை பதிவு செய்வதில் காலதாமதம் செய்தார். உஜ்ஜீவன் வங்கியில் கணக்கு துவங்குவதற்கு பிரதிவாதி என்ன ஆவணத்தை கொடுத்தார் என்று எனக்கு சரியாக தெரியாது ஓட்டுநர் உரிமம் அல்லது ஆதார் அட்டையை கொடுத்திருக்கலாம். மேற்படி ஆவணத்தை போனிலிருந்து அவர் காட்டினார். அசல் ஆவணங்கள் இல்லாமல் வங்கியில் கணக்கு துவங்க முடியாது என்று சொன்னால் அன்றைய தினம் கணக்கு துவங்கினார்கள்.

5. கிரைய ஒப்பந்த ஆவணத்தை பதிவு செய்வதற்கு முயற்சி எடுத்தோம் என்றால் நாங்கள் பிரதிவாதியை அழைத்தோம் அவர் வருகிறேன் வருகிறேன் என்று சொல்லி வரவில்லை. அன்றைய தினத்தில் அசல் ஆதார் அட்டை இல்லாத காரணத்தினால் கிரைய ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்படவில்லை. மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரம் அசல் அடையான ஆவணம் இல்லாத காரணத்தினால் பதிவு செய்ய முடியாமல் இருந்திருந்தால் பிரதிவாதி வங்கிக் கணக்கு துவங்கிய போது நான் உடன் சென்றிருக்க மாட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பேருந்தில் ஏற்றி விடவில்லை அவர் இருசக்கர வாகனத்தில் வந்து அதிலேயே சென்று விட்டார்.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.09.13 11:36:02 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.